# அலகுத் தேர்வு - 1

## பதினோராம் வகுப்பு ------ வணிகவியல்

## அலகு – 1. தொழிலின் அடிப்படைக் கூறுகள்

காலம் : 1.15 நிமிடம் மதிப்பெண்கள் : 50

பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. எவை சரியாக பொருந்தவில்லை?
   அ) ஆள்சார் தடை ----- வியாபாரம்
   ஆ) இடத் தடை ----- சந்தை
   இ) காலத் தடை ----- பண்டககாப்பகம்
   ஈ) நிதி தடை ----- வங்கி

2. அர்த்தசாத்திரம் என்ற புத்தகத்தை எழுதியவர் ----------
   அ) கௌடில்யர் ஆ) சாணக்கியா இ) இளங்கோவடிகள் ஈ) பால்பன்

3. வியாபாரம் என்ற சொல்லை, முதன் முதலில் --------- ல் வாழ்ந்த மக்கள் பயன்படுத்தினார்கள்.
   அ) கங்கை சமவெளி ஆ) சிந்து சமவெளி இ) ஹரப்பா ஈ) மேற்கண்ட அனைத்தும்

4. மருத்துவர் தொழில் என்பது --------
   அ) தொழில் ஆ) சிறப்புத் தொழில் இ) தனியார் வணிகம் ஈ) அ மற்றும் ஆ

5. வேறுபட்ட ஒன்று எது?
   அ) தியானம் செய்வது ஆ) விழாக்கள் கொண்டாடுவது
   இ) குல்பி ஐஸ்கிரீம் விற்பது ஈ) கோவிலுக்குச் செல்வது

6. வணிகம் என்பது எதனை உள்ளடக்கியது?
   அ) பொருட்களை அளித்தல் ஆ) பொருட்கள் விலையிடல்
   இ) பொருட்களை கொள்முதல் மற்றும் விற்பனை செய்தல் ஈ) மேற்கண்ட அனைத்தும்

7. நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலை -----------
   அ) ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆ) மரபுசார் தொழிற்சாலை
   இ) கட்டுமானத் தொழிற்சாலை ஈ) பகுப்பாய்வு உற்பத்தி தொழில்

8. தவறான கூற்று எது?
   அ) உற்பத்தித் தொழில் உருவப்பயன்பாட்டை உருவாக்குகின்றது
   ஆ) வணிகம் இடப்பயன்பாட்டை உருவாக்குகின்றது
   இ) வியாபாரம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகின்றது
   ஈ) போக்குவரத்து காலப்பயன்பாட்டை உருவாக்குகின்றது

9. கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி செய்வது ------------- ஆகும்.
   அ) வேலை ஆ) வியாபாரம் இ) வணிகம் ஈ) தொழில்

10. கூற்று (A) : ஒருவர் தன்னுடைய சொந்தப் பயன்பாட்டிற்கு இருசக்கர மோட்டார் வாகனத்தை வாங்கி குறிப்பிட்டகாலம் கழித்து அதை இலாபத்திற்கு விற்று விட்டால் அது தொழிலாகாது.
    காரணம் (R) : தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும்.

Padasalai

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A தவறு ஆனால் R சரி

## பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. வணிகத்தை வரையறுக்க.
12. நாளங்காடி என்றால் என்ன?
13. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
14. தொழில் செயல்பாடுகளை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
15. சிறப்புத் தொழில் கட்டணம் என்றால் என்ன?
16. தொடர் முறை உற்பத்தித் தொழில்கள் என்றால் என்ன?
17. இன்றைய தொழில் நுட்ப சமுதாயத்தில் வணிகச் செயல்பாடுகள் எவ்வாறு விரிவாக்கம் பெற்றுள்ளன?

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை?
19. போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.
20. தொழில் செயல்பாடுகளை எந்த அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
21. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?
22. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக
23. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
24. "வங்கிகளின் உதவியின்றி எந்த தொழிலமைப்புகளும் இயங்க முடியாது" என்ற கூற்று உண்மையா? விளக்கம் தருக.

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 × 5 = 15

25. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக

( அல்லது )

பொருளாதார செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதார சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

26. வணிகத்திற்கு உறுதுணையானவற்றை சுருக்கமாக விவரி.

( அல்லது )

தொழிலின் சிறப்பியில்புகள் யாவை?

27. தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க

( அல்லது )

வட இந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி.